අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# வரலாறு

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு** | 33 | T | I |

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**வரலாறு - I** — நேரம் : 1 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. மகாவம்சத்தின் உரைநூலான 'டீகாவ' எனும் உரைநூல் எவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது?
   (1) வினயஅட்டகதா (2) வம்சத்ப்பகாசினி
   (3) திசரசந்தேசய (4) பூஜாவலிய

2. வசப மன்னனின் வல்லிபுர பொற்சாசனத்தின் வடபகுதியை ஆண்ட எவ் அமைச்சர் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.
   (1) ரிஷிகிரி (2) அசேல (3) உத்திய (4) தண்டநாயக்க

3. அனுராதபுர இராசதானியில் குதிரைத்தலையும் மனித உருவமும் காணப்படும் விகாரை.
   (1) ரன்கொத் விகாரை (2) ஜேதவனராமய விகாரை
   (3) இசுறுமுனிய விகாரை (4) கிரி விகாரை

4. முன்வரலாற்றுக்கால மரணச்சடங்கு முறைகளில் ஒன்றாகக் கருதப்படுவது.
   (1) துளையிடப்பட்ட மண்டையோடு கண்டுபிடிக்கப்பட்டது.
   (2) மெகாதிலிக் மயானங்கள் தோணி வடிவில் அமைக்கப்பட்டமை.
   (3) சடலம் உக்கிப்போவதற்கு சருகுகளால் மூடப்பட்டிருந்தமை
   (4) பரணி மயானங்கள் காணப்பட்டமை.

5. இளநாக மன்னனால் (கி.பி 33 – 43) கிருந்தி ஓயாவுக்குக் குறுக்காக அணைகட்டி அமைக்கப்பட்ட குளம்.
   (1) மின்னேரியா (2) கந்தளாய்க் குளம்
   (3) திஸ்ஸ மகாராம (4) குளம்அபய வாவி

6. புராதன இலங்கையில் 'கமிக' செல்வந்தனாகவும் நெல்மூடைகளை கடனாக கொடுக்கக்கூடிய இயலுமை உள்ளவனாக இருக்கவேண்டும் எனகூறப்பட்ட நூல்.
   (1) சமந்த பாசதிக (2) ஜாதக அட்டகதா (3) பெரகும்பா சிரித (4) மகாவம்சம்

7. பொலநறுவையை தலைநகரமாக்க 1ம் விஜயபாகுவிற்கு சாதகமாக அமைத்த துறைமுகம்.
   (1) கோகண்ண (2) லங்காபட்டுன (3) மாந்தை (4) ஊராத்தோட்டை

8. துட்டகைமுனு மன்னன் தொடர்பான மிகச்சரியான கூற்றாக அமைவது.
   (1) இந்நாட்டை ஆண்ட மேன்மையான மன்னன்
   (2) முதன்முதலாக பாரிய குளங்களை அமைத்தமை
   (3) நாட்டை நிர்வாக அலகுகளாக பிரித்து அமைச்சர்களிடம் ஒப்படைத்தமை.
   (4) இலங்கைத் தீவினை ஒன்றுபடுத்திய முதல் மன்னன்.

9. கிபி 9 ஆம் நூற்றாண்டில் இலங்கையை "சிவப்பு தீவு" எனக் குறிப்பிட்டுள்ள அராபியர்.

(1) இபின்பதூதா (2) அல்-பலசூரி (3) பாகியன் தேரர் (4) கியூங்சாங்

10. இலங்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் தென்னிந்தியர்களுக்குரிய வர்த்தக நிறுவனங்களில் ஒன்றல்லாதது.

(1) நானாதேசி (2) ஐந்நூற்றுவர் (3) வலஞ்சியா (4) நியம்கம்

11. இலங்கையில் பல்வேறு கலாசாரங்களை கொண்ட மக்களையும், அவர்களுக்குரிய பிரதேசங்களையும் இணைக்கும் போது பெறப்படும் சரியான விடைத்தொகுதி.

| நிரல் - I | நிரல் - II |
|---|---|
| 1. தமிழர்கள் | A. மெசிடோனியா |
| 2. அயோனியன்கள் | B. தென் இந்தியா |
| 3. காம்போஜகர்கள் | C. மலாக்கா |
| 4. யாவகர்கள் | D. ஆப்கானிஸ்தான் |

(1) B A D C (2) B C D A (3) C B A D (4) C A D C

12. மகாவாவிகளை (பெருங்குளங்களை) அமைத்தமைக்கு பிரதான நோக்கமாக கருதப்படுவது.

(1) காலநிலையின் சமநிலையை பாதுகாக்க.
(2) மண்வளத்தை பாதுகாக்க.
(3) நகர மக்களின் நீர்த் தேவையை நிறைவுசெய்ய.
(4) நிலத்தின் குளிர்ச்சித் தன்மையை பேணுவதற்கு.

13. 'நவநீதம்' எனும் களிமண் எத்தொழில்நுட்பத்திற்காக பயன்படுத்தப்பட்டது.

(1) பூங்கா அமைக்கும் தொழில்நுட்பம் (2) கட்டட தொழிநுட்பம்
(3) குளம் அமைக்கும் தொழிநுட்பம் (4) மட்பாண்டத் தொழிநுட்பம்

14. புராதன இலங்கையின் அளவை முறைகளை பயன்படுத்தியமைக்கான ஆதாரமாக நிஸங்கமல்ல மன்னன் காலத்தில் வீதிகளில் அமைக்கப்பட்ட கற்றூண்.

(1) பரமாணு (2) யொதுன (3) அமுன (4) காவுதகணு

15. பின்வருவனவற்றுள் எமது முன்னோர்களால் சுற்றாடலை பாதுகாப்பதனை உணர்த்திய சந்தர்ப்பமாக அமைவது.

(1) மண்வளம் குன்றிவிடாது பாதுகாத்தமை.
(2) உயர்நிலங்களில் உள்ள மரங்களை வெட்டலாம் என சட்டம் வகுத்தமை.
(3) காட்டு மரங்களை வெட்டுவதற்கு அனுமதியளித்தல்.
(4) நீர் நிலைகளை பாதுகாக்க தவறியமை.

16. எம் நாட்டு மக்களிடையே பழங்காலத்தில் சிறந்த உணவாக காணப்பட்ட கஞ்சி பழைய நூல்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) திலிசங்குலிகா (2) அத்சுணு (3) அபுஹம்புகாடி (4) தீகிரி

17. உலர்வலய புராதன நகரங்களுள் வடமத்திய மற்றும் தென்மாகாண நகரங்களாக நீண்டகாலமாக புகழ்பெற்று திகழ்ந்தவை.

(1) அனுராதபுரம், பொலநறுவை (2) அனுராதபுரம், மாகம
(3) பொலநறுவை, தம்பதெனியா (4) தம்பதெனிய, மாகம

18. கிபி 6 ஆம் நூற்றாண்டின் பின்னர் இந்துசமுத்திரத்தில் நடைபெற்று வந்த சர்வதேச வர்த்தகம் எவ் இனத்தவர் வசமானது.

(1) அராபியர் (2) போத்துக்கீசர் (3) ஒல்லாந்தர் (4) ஆங்கிலேயர்

19. கண்டி இராச்சியத்தில் பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்ட நிலம்.

(1) கபடாகம் (2) பரவேனிகம் (3) நிந்தகம் (4) விகாரகம்

20. கண்டி அரசமாளிகையில் புனித தந்ததாதுவுக்கு பொறுப்பான அதிகாரி.

(1) சலுவடன நிலமே (2) பத்வடனநிலமே
(3) தியவடனநிலமே (4) கஜநாயக்கநிலமே

21. உரோமப்பண்பாடு வீழ்ச்சி அடைந்த காலகட்டம்.

(1) கிபி 5 ஆம் நூற்றாண்டு (2) கிபி 6 ஆம் நூற்றாண்டு
(3) கிபி 7 ஆம் நூற்றாண்டு (4) கிபி 8 ஆம் நூற்றாண்டு

22. செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை எனப்படுபவர்.

(1) நிக்கலஸ்கொப்பர்ணிகஸ் (2) கலிலியோகலிலி
(3) ஜோஹென்ஸ் கெப்லர் (4) ஐசாக் நியூட்டன்

23. ஐரோப்பியர்கள் ஆசியாவுக்கு வருகை தந்ததன் நோக்கங்களில் உள்ளடங்காதது.

(1) பொருளாதார ரீதியாக இலாபம் ஈட்டல்.
(2) கிறிஸ்தவ சமயத்தை பரப்புதல்.
(3) ஐரோப்பாவில் ஏற்பட்ட காலநிலை மாற்றம்.
(4) உலகரீதியாக புகழ்பெறல்.

24. போர்த்துக்கேயர் வருகையின் போது கோட்டை இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னன்.

(1) ஆறாம் விஜயபாகு (2) ஆறாம் பராக்கிரமபாகு
(3) றைகமபண்டார (4) எட்டாம் வீரபராக்கிரமபாகு

25. பின்வருவனவற்றுள் கைத்தொழில் புரட்சியால் இலங்கையில் ஏற்பட்ட செல்வாக்கு அல்லாதது.

(1) நகரங்கள் தோன்றி வளர்ச்சியடைந்தன.
(2) தொழிலாளர் வகுப்பு தோற்றம் பெற்றமை
(3) தன்னிறைவுப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது.
(4) தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

26. கைத்தொழிற் புரட்சியின் சில விளைவுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவை முறையே எத்துறைகளை சார்ந்தன.

A – உழைப்புச் சுரண்டல்

B – உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வளர்ச்சி

C – வேலைவாய்ப்பு கிடைத்தல்

(1) பொருளாதாரதுறை, அரசியல்துறை, சமூகத்துறை
(2) அரசியல்துறை, பொருளாதாரத்துறை, சமூகத்துறை
(3) சமூகத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை
(4) அரசியல்துறை, சமூகத்துறை, பொருளாதாரதுறை

27. ரொபட் அன்ரூஸ் அவர்களின் தூதின் முக்கிய நோக்கமாயிருந்தது.

(1) ஒல்லாந்தரின் கோட்டைகளை கைப்பற்றிக் கொள்வதற்கு யுத்தம் நடைபெறும் வேளையில் கண்டி மன்னனின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.
(2) கண்டி மன்னனின் நிபந்தனைகளை ஏற்று நீண்டகால நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளல்.
(3) ஐரோப்பிய சந்தையில் அதிக கேள்வி நிலவிய உயர்தரமான கறுவாவை பெற்றுக்கொள்ளல்.
(4) ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக கம்பனி மூலம் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளல்.

28. ஆங்கிலேய வர்த்தகக் கம்பனியின் நிர்வாகத்தின் கீழ் கவனிப்பாரற்று விடப்பட்ட சுதேச உத்தியோகத்தர்கள்.

(1) முதலியார் (2) கலெக்டர் (3) அவுமில்தாரர் (4) ரெசிடன்

29. இராசரட்டை வீழ்ச்சியின் பின் அழிந்துகொண்டிருந்த வரலாற்று மூலாதாரங்களை தேடிக்கண்டறியும் தொல்பொருள் அகழ்வுகளிலும் ஆய்வுகளிலும் ஈடுபட்ட ஐரோப்பிய கல்விமான்கள்.

(1) ஜோன் த சில்வா, வலிசிங்க ஹரிச்சந்திர
(2) ஜோர்ஜ்டர்னக், எச்.சீ.பி.பெல்
(3) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட், அநாகரிக தர்மபால
(4) ஜெரமியஸ் வீ.தியெஸ், ஸ்ரீ சுபுதி தேரர்

*30.* இலங்கை தேசிய சங்கத்தின் தலைவர்.

(1) ஜோன் த சில்வா (2) சேர் பொன் இராமநாதன்
(3) பொன்னம்பலம் அருணாசலம் (4) ஆறுமுகநாவலர்

கீழே A தொடக்கம் F வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 31 முதல் 33 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A – அரசின் வர்த்தக ஏகபோக முறைமை அகற்றப்பட்டது.

B – ஆளுநர் நாயகம்

C – நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி

D – விகிதாசார பிரதிநிதித்துவ முறை

E – சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம் என்பன அமைக்கப்பட்டன.

F – பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை.

*31.* மேற்படி கூற்றுக்களில் சோல்பரி யாப்புடன் தொடர்புடைய கூற்றுக்களாக அமைவன.

(1) A யும் C யும் (2) B யும் E யும் (3) B யும் F யும் (4) D யும் F யும்

*32.* 1978 ஆண்டு யாப்புடன் தொடர்புடைய கூற்றுக்களாக அமைவன.

(1) A யும் B யும் (2) A யும் E யும் (3) C யும் F யும் (4) C யும் D யும்

*33.* இலங்கையரிடம் குறிப்பிடத்தகு அரசியல் பொறுப்புக்களை கையளித்த யாப்பு.

(1) கோல்புறூக் - கமரன் (2) குறூ – மக்கலம்
(3) டொனமூர் (4) சோல்பரி

கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிகளை/சோடிச் சொற்களை அவதானித்து 34 தொடக்கம் 36 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

A 1 - அமெரிக்க சுதந்திரப் போர்
2 - பொஸ்டன் தேநீர்விருந்து

B 1 - 1774 பிலடெல்பியா மாநாடு
2 – பிரான்ஸ் சுதந்திர அரசாகியது

C 1 – நிதிநிலை சீரழிவு
2 – புரட்சி

D 1 – பாண் விலை அதிகரிப்பு
2 – ரஸ்யப்புரட்சி

*34.* முதலாவதன் வீழ்ச்சி இரண்டாவதன் தோற்றத்திற்கு காரணமாயமைவதை எடுத்துக்காட்டும் சோடி

(1) A (2) B (3) C (4) D

*35.* முதலாவது கூற்றுக்கும் இரண்டாவது கூற்றுக்கும் எவ்வித தொடர்பும் அற்ற சோடி

(1) A (2) B (3) C (4) D

*36.* இரண்டாவதன் விளைவினால் முதலாவது தோற்றம் பெற்றதைக் குறிக்கும் சோடி

(1) A (2) B (3) C (4) D

பின்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையிலான தகவல்களைக் கொண்டு 37, 38 ஆகிய வினாக்களுக்கு விடைதருக.

| பயிர் | பிரதேசம் | ஆராய்ச்சி நிலையம் |
|---|---|---|
| A-தேயிலை | D – களுத்துறை சப்பிரகமுவ மேல் தென் மத்திய மாகாணங்கள் | G – அகலவத்தை |
| B-தென்னை | E – மலைநாட்டுப் பிரதேசங்களை விட பரந்த சமவெளிகள் | H – தலவாக்கல |
| C-இறப்பர் | F – உலர்வலயம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பிரதேசங்கள் | I - லுணுவில |

*37.* தேயிலை பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய பிரதேசமும் ஆராய்ச்சி நிலையமும்.

(1) E, H (2) D, G (3) F, J (4) F, H

38. ஆரம்பத்தில் களுத்துறை மாவட்டத்திலும் பின்பு சப்பிரகமுவ மேல் தென் மத்திய மாகாணங்களில் செய்கை பண்ணப்பட்ட பயிரும் ஆராட்சி நிலையமும்.

(1) B, H (2) A, G (3) B, H (4) C, G

39. இலங்கையில் முதலாவது கைத்தொழில் பேட்டை நிறுவப்பட்ட இடம்.

(1) எக்கல (2) அச்சுவேலி (3) இரத்மலான (4) மாத்தளை

40. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையுடைய 5 நாடுகள்.

(1) ஐக்கிய அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா
(2) ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சீனா
(3) ரஷ்யா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ்
(4) பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா, ஜப்பான், இந்தியா

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு** | 33 | T | II |

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**வரலாறு - II** | **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்**

* பகுதி I இல் வினா இலக்கம் 1 கட்டாயமானது.
* பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
* எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

1.(அ) கீழே (i) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) ஹெமன் கெயில், கலாவாவி, வளைவகங்கை, கம்பளை, எலகர கால்வாய், பதவியா குளம், ரந்தெனிவெல நீர்த்தேக்கம், பதிராஜவல, மாதோட்டம், கல்லோயா, சிலாபம், மிகிந்தலை

(12 புள்ளிகள்)

(ii) மலாயா தீபகற்பம், மத்திய தரைக் கடல், கொன்ஸ்தாந்திநோபிள், டோக்கியோ, சீயம், லிஸ்பன் (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - இலங்கை வரலாற்றில் முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்கிய மன்னன்.

B – புராதனகாலத்தில் நிலவிய நெசவுக் கைத்தொழில் (நூல்நூற்போர்) பற்றி குறிப்பிட்டுள்ள திடமான ஆதாரமாக அமையும் கல்வெட்டு.

C – மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலிய நாட்டு எழுத்தாளர் தாந்தே எழுதிய காவியம்.

D – ‘நானே அரசு’ எனக்கூறிய மன்னன். (04 புள்ளிகள்)

• A, B எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒளிப்படங்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A



(ii) 1. ‘A’ எழுத்தினால் காட்டப்பட்டுள்ள உருவின் பெயர் யாது?
2. இந்நிர்மானிப்பினை அமைத்த மன்னன் பெயர் யாது?
3. இது அமைந்துள்ள இராசதானி எது?
4. இதன் சிறப்பு யாது? (04 புள்ளிகள்)

B



(iii) 1. உரு B யில் காட்டப்பட்டுள்ள நபரின் பெயர்.
2. இவரது தாய்நாட்டினை பெயரிடுக.
3. இவருடன் தொடர்புடைய சம்பவம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
4. இச்சம்பவம் எவ் யுத்தத்திற்கு உடனடிக் காரணமாக அமைந்தது.

(04 புள்ளிகள்)

## பகுதி II

2. (i) வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் வாழ்ந்த கரையோர வெட்டவெளிகள் **மூன்றினை** பெயரிடுக.

(03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துடன் ஒப்பிடுகையில் முன் வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) முன்வரலாற்றுக் கால மரணச்சடங்கு முறைகளில் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுககால குடியிருப்புக்களின் பரம்பலை **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)

3. (i) A - இல்லத்தலைவன்

B – கிராம தலைவன்

C – பிரதேச தலைவன்

A,B,C யினால் குறிப்பிடப்படும் பதவிப் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) புராதன காலத்தில் குளத்தொகுதி அமைக்கப்பட்டமைக்கான காரணங்கள் **இரண்டினை** எழுதுக.

(04 புள்ளிகள்)

(iii) முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தை **இரு** விடயங்களைக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சியில் அரசின் வளர்ச்சியினை தெளிவுபடுத்தி சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

4. (i) புராதன வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட முக்கியவரிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(ii) பதுளை தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகச் சட்டங்கள் **இரண்டு** தருக.

(04 புள்ளிகள்)

(iii) முற்கால இலங்கையின் பெண்களின் பிரதிநிதித்துவம் பற்றி **இரு** விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) புராதன இலங்கையின் மக்கள் சுதேச உணவுகளில் அதிக கவனம் செலுத்தி இருந்தமைக்கான ஆதாரங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

5. (i) எமது நாட்டிற்கு வருகைதந்த மிசனறி அமைப்புக்கள் **மூன்றினை** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே A,B,C,D என தரப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A – காலியில் இலங்கையர்களால் நிறுவப்பட்ட முதலாவது அச்சகம்.

B – ஐம்பெரும் விவாதங்களில் பிரசித்திபெற்றவர்.

C – தற்போதைய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர்.

D – முஸ்லிம் நேசன் என்னும் பத்திரிகையை பிரசுரித்தவர்.

(டீ.பீ.ஜாயா, அறிஞர் சித்திலெப்பை, ஆறுமுக நாவலர், சேர் பொன் இராமநாதன், மீகெட்டுவத்தே குணாணந்த தேரர், லங்கோபகார) (04 புள்ளிகள்)

(iii) பிரித்தானியரின் மிசனரி இயக்கங்கள் கிறிஸ்தவ சமயத்தை இந்நாட்டில் பரப்புவதற்காக கையாண்ட **இரு** வழிமுறைகளையும் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பௌத்த சமய மறுமலர்ச்சியாளர்களால் தமது சமயத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) புராதனகால நீர்ப்பாசன விருத்திக்காக அமைக்கப்பட்ட எலகர காலவாய் மூலம் நீரைப் பெறும் குளங்கள் **மூன்று** தருக. (03 புள்ளிகள்)

(ii) சிகிரியாவின் நீர்ப்பூங்கா தொழிநுட்பத்தின் சிறப்பம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(iii) புராதனகால கட்டட தொழிநுட்பத்திற்கு சிறந்த உதாரணமாக ருவான் வெலிசாயவின் அத்திவாரம் காணப்படுகின்றது. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள **இரு** தொழிநுட்பங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) புராதன இலங்கையில் இரும்பைப் பிரித்தெடுக்கும் தொழிநுட்பம் சிறப்பாக இடம்பெற்றமைக்கான **இரு** ஆதாரங்களையும் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

7. (i) பின்வரும் சீர்திருத்தங்கள் இடம்பெற்ற அரசியல் யாப்புக்களைக் குறிப்பிடுக.

A – வாக்குரிமை அறிமுகப்'படுத்தப்பட்டது.

B – கட்டாய இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை.

C – பிரதேசவாரி தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்டமை. (03 புள்ளிகள்)

(ii) கீழே A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A – படித்த இலங்கையர் சார்பாக முதன் முதலில் சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

B - இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி.

C - இலங்கையின் முதலாவது பிரதமர்.

D - இலவசக் கல்வியின் தந்தை.

( டட்லி சேனநாயக்க, டீ.எஸ்.சேனநாயக்க, ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா, வில்லியம் கோபல்லாவ, CWW கன்னங்கரா, சேர் பொன் இராமநாதன்) (04 புள்ளிகள்)

(iii) சோல்பரி அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்கள் **இரண்டை** குறிப்பிட்டு விளக்குக. ( 05 புள்ளிகள்)

(iv) 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் பின்வரும் விடயங்களில் எவையேனும் **இரண்டு** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

A – பாராளுமன்றம்

B – ஜனாதிபதித் தேர்தல்

C – விகிதாசார பிரதிநிதித்துவ முறை

(06 புள்ளிகள்)

## பகுதி III

8. (i) கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட பிரதான துறைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **இரண்டு** தருக. (04 புள்ளிகள்)

(iii) நிலக்கரி கைத்தொழிலில் வளர்ச்சி ஏற்பட்டமைக்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட விளைவுகளை **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(06 புள்ளிகள்)

9. (i) A. பிரான்சியப் புரட்சியின் எண்ணக்கருவை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

B. பிரான்சிய புரட்சிக்கு காரணமான அரச வம்சத்தினை பெயரிடுக. (01 புள்ளிகள்)

(ii) கீழே A,B,C,D எனத்தரப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளை **முறையே** எழுதுக.

A – பிரான்சின் ஊழல் நிறைந்த ஆட்சியின் அடையாளமாகக் கொள்ளப்படுவது.

B – 'அந்த சந்தர்ப்பத்தில் நாம் அதிகாரத்தைக் கைப்பற்றாது விட்டால் வரலாறு எமக்கு இரக்கம் காட்டமாட்டாது' எனக் கூறியவர்.

C – 'மக்களின் நலன் கருதி செயற்படாத ஆட்சியாளரைத் துரத்தி விடுவது மக்களது பொறுப்பு' எனக் குறிப்பிட்டவர்.


D – லூயி மன்னர்களின் ஆடம்பர வாசஸ்தலம். (04 புள்ளிகள்)

(iii) பிரான்சியப் புரட்சிக்கான அரசியல் காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(iv) பிரான்சியப் புரட்சிக்குப் பங்களிப்புச் செய்த தத்துவ ஞானிகள் **மூவரைக்** குறிப்பிட்டு அவர்களின் பணியினைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)


N

